# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 71/2022 |
| Deposition of witness | | PW- 3 /ADW |
| Name | | திரு.புண்ணியமூர்த்தி SSI |
| Father’s Name | | திரு.தினகரன் |
| Village | | சித்துக்காடு |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 56/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 05th day of March 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பட்டுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். உதவி ஆய்வாளர் தென்னரசு அவர்களுடன் நான் பணிபுரிந்ததால் அவர்களுடைய கையெழுத்தும் கையொப்பமும் நன்கு தெரியும் என்பதால் ஆவணங்களை பார்த்து சாட்சி அளிக்கிறேன். கடந்த 05.02.2019 பட்டுக்கோட்டை நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் தென்னரசு அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது பிரசாஷ் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.102/2019 U/s 386, 506(ii) IPC 05.02.2019 ம் தேதி 20.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த புகார் மனு **அ.சா.ஆ. 2** , முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கை தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை அன்றையதினமே இரவு 21.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு சட்சிகள் முகமது உசேன், முத்தையா ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம்

தயார் செய்துள்ளார். பார்வை மகசர் **அ.சா.ஆ.4** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பட்டியலில் கண்ட சாட்சிகள் பிரகாஷ், அருண் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான முகமது உசைன், முத்தையா ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் செய்துள்ளார். தனது விசாரணையில் வழக்கு சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் வழக்கின் எதிரியான ஜேம்ஸ் என்பவரை மகாராஜாசமுத்திரம் காட்டாற்றுப்பாலம் அருகே காவல் உதவி ஆய்வாளர் தென்னரசு மற்றும் போலிசாரை கண்டதும் பாலத்திலிருந்து குதித்து தப்பிக்க முயன்றவரை 05.02.2019 ந்தேதி 23.00 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்து எதிரி ஜேம்ஸ் தாமாக முன்வந்து எவ்வித அச்சுருத்தல், துன்புருத்தல் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை புலன் விசாரணை அதிகாரியான தென்னரசு சாட்சிகள் சரேஷ்குமார் மற்றும் ராஜா முகமது ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த வழக்கின் தடயப்பொருட்களை 23.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைபற்றுதல் மகசரில் கைபற்றியுள்ளார். பின்னர் எதிரி மற்றும் வழக்கின் தடயப்பொருள் நிலையம் வந்து ரேகை பரிசோதனை செய்து படிவம் 95 நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்றும் எதிரிக்கு வலது கணுக்காலில் காயம் ஏற்பட்டிருந்ததால் காவல் நிலைய மருத்துவ நமுனா 1/19 ன் படி பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளார். பின்பு தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.6,** மற்றும் கைபற்றுதல் மகசர் **அ.சா.ஆ.7,** மற்றும் படிவம் 95 **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் தடயப்பொருள் ஊதா மற்றும் வெள்ளை நிற கைப்பிடி கத்தி **அ.சா.பொ.** 1,மற்றும் பணம் ரூ.900 **அ.சா.பொ.2** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து கொண்டு எதிரி மீது கடந்த 06.04.2019 ந்தேதி ச.பி. 386, 506(ii) IPC ன் கீழ் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதியிடம் தவறான தகவலை பெற்று பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு. த.சுதர்சன்,எம்.ஏ,,.எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை